**காரைநகர் பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைநகர் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பிரதேச சபையின் வலுவூட்டும் வேலைத்திடடத்திற்கமைவாக நிறைவேற்றப்பட்டிருந்த 05 வேலைகளுக்குரிய கொடுப்பனவுகள் ஒப்பந்தகாரருக்கு முற்றாகச் செலுத்தப்பட்டிருந்தும் கூட்டுமொத்தம் ரூபா 1,667,456 சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,677,456 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

(i) சபையினால் நான்கு வகையான புனரமைப்பு வேலைகளுக்காக மூன்று ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,021,132 வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தும் கடந்த 06 தொடக்கம் 12 மாதங்களாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நேர்முன்னைய இரு ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் நிறைவேற்றப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 12.09 மில்லியன் பெறுமதியான பிரதேச சபையினை வலுவூட்டும் ஐந்து வேலைத்திட்டங்கள் தொடர்பில் கூட்டுமொத்தம் ரூபா 1.68 மில்லியன் நாளதுவரை மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சிடமிருந்து பெறப்படவேண்டியிருந்ததுடன் இது ஒப்பந்தகாரருக்கு சபை நிதி மூலமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 140(1) | | 7,800 ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க கடந்த 28 தொடக்கம் 42 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம் | | காசோலைகளில் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் பிணைப்பணம் பெறப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 5,992,332 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 9,186,097 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 10,000 | – | 6,750 | – | 20,000 | – | 7,900 | - |
| வாடகைகள் | 2,402,000 | – | 2,775,481 | – | 1,737,420 | – | 1,765,220 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 256,800 | – | 289,339 | – | 267,010 | – | 265,195 | - |
| ஏனைய வருமானம் | 9,504,260 | – | 13,522,672 | 16,505,725 | 9,810,870 | – | 9,622,454 | 9,650,363 |
| | **12,173,060** | | **16,594,242** | **16,505,725** | **11,835,300** | – | **11,660,769** | **9,650,363** |

(ஆ) சபையினால் வீதவரிகள் சேகரிப்பின் போது பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் நிலுவைகளானவை மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் திரண்டு வந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 வாடகைகள்

பக்கோ வாகன வாடகைக் கட்டணம் ரூபா 9,000 ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்படுவதற்கு கடந்த இரு ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக்கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 4,249,095 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவு முகாமைத்துவம்

நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

05 மயானங்களில் உடலைத் தகனம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு மயான வரியினை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 09 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

சபையின் பயன்பாட்டிலுள்ள மூன்று வாகனங்கள் சபைக்கு உரித்தற்றவையாகக் காணப்படுகின்றன.

**3.4.2 விளைவற்ற சொத்துக்கள்**

சபைக்குரித்தான ஆறு வாகனங்கள் பயன்பாடின்றிக் காணப்படுவதுடன் இவற்றைப் பயன்படுத்துவதற்கு கடந்த 05 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 3,250 தொடக்கம் ரூபா 5,823,399 அல்லது 33 சதவீதம் தொடக்கம் 92 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 3,171 தொடக்கம் ரூபா 5,232,910 அல்லது 01 சதவீதம் தொடக்கம் 23 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| கணக்கீடு | அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |